பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 29 | திங்கட்கிழமை | 12.02.2024 | அதிர்வு 195

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 06

# கயிறு கழுத்தில் இறுகி 12 வயது சிறுவன் சாவு

## நுவரெலியாவில் சோகம்



(செ.தி.பெருமாள்)

வீட்டுக்கு அருகில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் உள்ள சவுக்கு மரத்தில் கயிறு கட்டி விளையாடிக் கொண்டிருந்த 12 வயது பாடசாலை மாணவன் ஒருவர், கயிறு கழுத்தில் இறுகியதில் பலியாகியுள்ளார்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகஸ்தோட்ட பகுதியிலேயே நேற்று பிற்பகல் ஒரு 06

# உயர்தர மாணவி சடலமாக மீட்பு!



(எம்.எப்.எம். அலி)

பலாங்கொடை, பெட்டிகள பிரதேசத்தில் வீடொன்றின் குளியலறையில் இருந்து பாடசாலை மாணவி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீட்டார் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய பலாங்கொடை பொலிஸாரால் மேற்படி மாணவியின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. 06

# தமிழரசில் சமரச முயற்சி நேற்றும் சரிவரவில்லை!

## வவுனியா சந்திப்பில் முடிவில்லை



ச.குகதாசன்

(வசந்தன், ந.லோகதயாளன்)

**வவுனியா, பெப்ரவரி 12**

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவு தொடர்பில் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் சமரசம் எட்டுவதற்காக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற பிரமுகர்கள் கலந்துரையாடலும் முடிவின்றி நிறைவடைந்ததாகத் தெரிய வந்தது. 06



ஞா.சிறிநேசன்

# ரயில் மோதி சிறுவன் பலி



## தம்பலகாமத்தில் துயரம்

(அப்துல்சலாம் யாசீம் )

திருகோணமலை – தம்பலகாமம் பகுதியில் நேற்று ரயில் மோதி சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் சிக்கிய மேற்படி சிறுவன் 06




முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, சஜித் அணி பக்கத்தில் இருந்து ரணில் அணியின் பக்கத்துக்குத் தாவுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கடந்த ஏழாம் திகதி நாடாளுமன்றத்தின் வைபவ ரீதியான அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போது அவரது உரைக்கு எதிர்ப்புத் 06



# உண்மை, நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை உருவாக்குவது பற்றி கொழும்பில் கலந்துரையாடல்

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற்கான உத்தேச சட்டம் தொடர்பில் ஆலோசிப்பதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மற்றும் சட்டம் தொடர்பான பேராசிரியை சாவித்ரி குணசேகர ஆகியோரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் கொள்கைப் பிரதானி கலாநிதி சி.வை.தங்கராஜாவின் உதவியுடன் அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவம்சவினால் கலந்துரையாடல் நெறிப்படுத்தப்பட்டது. இதில் அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டம் மற்றும் நிலைமாறுகால நீதித்துறையில் உள்ள அறிஞர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் வரைவின் பல்வேறு அம்சங்களைப் பற்றி கலந்துரையாடுவதும் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படாத வகையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் ஆராய்வதும் இந்த கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக இருந்தது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகம் பாதிக்கப்பட்ட குழுக்கள், அழுத்தத்திற்கு முகங்கொடுத்த தரப்பினர்கள், மதத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் போன்ற தரப்பினர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சிகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன என இங்கு குறிப்பிடப்பட்டது.

ஏனைய அதிகார எல்லைகளில் உண்மை, நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புக்கான பொறிமுறைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை தயாரித்தல் முன்மொழியப்பட்ட சட்டத்தின் கீழ் ஆணையாளர்களின் பரிசீலனைக்கான வழிகாட்டுதல்கள் தயாரித்தல் மற்றும் முனைப்புடன் பணியாற்றுவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.







# நிரந்தர உரிமை அடிப்படையில் பெருந்தோட்ட மக்களுக்கு காணி

## அமைச்சர் ஜீவன் தலைமையில் அலரி மாளிகையில் விசேட கலந்துரையாடல்

பெருந்தோட்டங்களில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 பேர்ச்சஸ் காணியை நிரந்தர உரிமை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஜனாதிபதியால் 400 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் பிரதமரின் செயலாளரின் பங்கேற்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இது தொடர்பான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில், –

“பெருந்தோட்டங்களில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 பேர்ச்சஸ் காணியை நிரந்தர உரிமை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கையை நாம் இணைந்து முன்னெடுத்துள்ளோம்.

தேசிய ரீதியிலான 86 சதவீதமானோருடன் ஒப்பிடுகையில், பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களில் 8 சதவீதமானோருக்கு மாத்திரமே சொந்த வீடு காணப்படுகிறது. இந்த வரலாற்று அநீதியை நாம் சரி செய்வோம்.

அரசாங்க அதிகாரிகள், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர்.

பொருத்தமான காணிகள் மற்றும் பயனாளிகளை அடையாளம் காணுதல், வரைபடமிடுதல், அளவீடு செய்தல், பத்திரங்களை தயாரித்தல் போன்ற நடைமுறைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த வகையில், இந்த திட்டத்தின் மூலம் 2 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயனடைவார்கள். அதற்கான செயல்முறையை ஒருங்கிணைக்க ஒரு செயலகத்தை அமைக்கப்பதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டதோடு, இந்த வேலைத்திட்டத்துக்காக ஜனாதிபதியினால் 400 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

200 வருடங்களாக எமது பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய பெருந்தோட்ட சமூகம் வாழ்வதற்கு ஓர் இடம் என்ற எளிய பாதுகாப்பைக் கூட அனுபவித்ததில்லை.

இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் அவர்களுக்குள்ள அனைத்து உரிமைகளையும் அவர்கள் அனுபவிப்பதை இந்த முயற்சி உறுதி செய்கிறது. இது அவர்களின் சொந்த நிலத்தின் உறுதியையும் பாதுகாப்பையும் அவர்களின் எதிர்காலத்தில் ஒரு பங்கையும் கொடுக்கும். எனவே இதனை வழங்குவதில் நான் உறுதியாகவுள்ளேன். – என்று குறிப்பிட்டுள்ளார்.









# நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் ஜனாதிபதியை நியமிப்பதற்கு ரணில் முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் ஜனாதிபதியை நியமிக்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருகின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

வத்தளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ராஜபக்ஷக்கள், யுத்த வெற்றியை முதன்மையாகக் கொண்டு நாட்டின் உரிமையை எழுதி எடுத்தது போல் வெட்க மின்றி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை எழுதி எடுத்துக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதி பதி முறைமையை இல்லாதொழிக்கத் தயாராகி வருகின் றார் என்று அவருக்கு நெருங்கிய பத்திரிகைகள் ஊடாக பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார்.

ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலயே நாமும் இருக்கின்றோம். என்றாலும் நாட்டு மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்பட்டே அதனை இல்லாதொழிக்க வேண்டும். பொதுத்தேர்தலில் மக்கள் வாக்க ளிக்கும் உரிமை பாதுகாக்கப்பட்டே நிறைவேற்று ஜனாதி பதி முறைமையை ஒழிக்க வேண்டும். இதுவரை போதிய காலம் காணப்பட்டது. வேண்டிய வாக்குகள் காணப்பட்டண. ஜனாதிபதியாகுவதற்கான ஆசனங்கள் காணப்பட்டன.

ஜனாதிபதியைப் பெற்றுக்கொள்ள 134 ஆசனங்கள் இருந்தன. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க 150 ஆசனங்கள் காணப்பட்டன. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்றிருந்தால் மீதமுள்ள 16 பேரைக் கொடுத்திருப்போம்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்த வேண்டிய காலம் நெருங்கி யுள்ள நேரத்தில் இவர்கள் இதனை ஒழிக்க முன்வந்துள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற பெயரில் மக்கள் ஆணைக்கு முரணாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் ஆயுள் காலத்தை நீடித்துக்கொள்ளத் தயாராகி வருகின்றார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட கட்சியாக இந்நாட்டு மக்களின் வாக்களிக்கும் உரிமையை இல்லாது செய்யச் செயற்படும் கொடுங்கோல் ஆட்சிக்கு நாம் ஒரு தெளிவான எச்சரிக் கையை விடுக்கின்றோம். அதாவது திகதி நிர்ணயிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்துகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் ஜனாதிப தியை நியமிக்க தற்போதைய ஜனாதிபதி முயற்சித்து வரு கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தில் திருத்தம் செய்வதற்கு அரசியல் கொள்கை ரீதியாக விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், புதிய மக்கள் ஆணையொன்றின் ஊடகவே இதனைச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. இவ்வாறு இல்லாமல் அவ்வாறானதொன்று இடம்பெறுவதற்கு இடமளிக்கமாட் டோம்.” - என்றார்.









# தேசிய வளங்களை தாரைவார்ப்பதாக இந்தியாவிடம் நாம் குறிப்பிடவில்லை

## மஹிந்தவை போன்று தம்மை விலைக்கு வாங்க முடியாது என்கிறார் அனுரகுமார



**"மஹிந்த ராஜபக்ஷவை விலைக்கு வாங்கியதை போன்று உலக நாடுகளால் எங்களை விலைக்கு வாங்க முடியாது. இந்திய விஜயத்தின் போது பல விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டன. நாட்டின் தேசிய வளங்களைத் தாரைவார்க்க ஒத்துழைப்பு வழங்குவதாக நாங்கள் குறிப்பிடவில்லை."**

**- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இந்திய அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ அழைப்புக்கு அமைய இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். இந்திய விஜயம் குறித்து சஜித் பிரேமதாஸ, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரம சிங்க ஆகியோரின் தரப்பினர் கலக்கமடைந்து பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்கள். அக்குற்றச்சாட்டுக்களைக் கண்டு நாங்கள் கலக்கமடையவில்லை.

தற்போது எதிரணி எமக்கும் அவர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் ஒன்றிணைவார்கள். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தேர்தல் காலத்தில் ஒன்றாக மேடையேறுவார்கள். அதே போல் மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ்ச் ஆகியோர் 2019 ஆம் ஆண்டு போல் கூட்டணியமைப்பார்கள். ரணிலுக்கும், சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் காணப்படுவதால் அவர்கள் ஒன்றிணைவது நிச்சயமற்றதாக உள்ளது.ஒருவேளை ஒன்றிணையலாம்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, மஹிந்த ராஜபக்ஷ,மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அனைவரும் நண்பர்கள். தேர்தல் காலத்தில் மாத்திரம் கொள்கை ரீதியில் வேறுபாடுகள் உள்ளன என்பது போல மக்கள் மத்தியில் காட்டிக் கொள்வார்கள். தேர்தல் முடிந்த பிறகு வெற்றி பெறும் நபருடன் இணக்கமாகச் செயற்படுவார்கள். காலம் காலமாக இந்த போலி மாற்றமே இடம்பெறுகிறது. இம்முறை இது மாற்றமடைய வேண்டும்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கது. எமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு எம்மிடம் ஊடக செல்வாக்கு கிடையாது, ஒருசில ஊடகங்கள் அரசியல்வாதிகள் வசமுள்ளதால் எமக்கு முறையான அங்கீகாரம் கிடைப்பதில்லை. துரதிஷ்டவசமாக நாங்கள் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்தால் சோர்வடைய போவதில்லை. நாட்டுக்கு தீங்கு ஏற்படுத்திய இந்த முறையற்ற அரசியல் கலாச்சாரத்தை முழுமையாக இல்லாதொழிக்க தொடர்ந்து முயற்சிப்போம்.

ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றால் முதலில் சிறந்த அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவோம். சட்டவாட்சி கோட்பாட்டின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகளைச் சட்டத்தின் முன் கொண்டு வந்து தண்டனை வழங்குவோம். அரசியல்வாதிகள் பொதுச் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற நிலைமையை மாற்றியமைப்போம்.மூடி மறைக்கப்பட்டுள்ள பிணைமுறி மோசடி உள்ளிட்ட பல ஊழல் மோசடிகளை முறையாக விசாரணை செய்து உரியத் தரப்பினருக்குத் தண்டனை வழங்குவோம்.

இலங்கையில் கல்வி,சுகாதாரம், வெளிவிவகாரம், சமூக நலன்,பொது விவகாரம் உள்ளிட்ட துறைகளில் நிலையான கொள்கை ஒன்று கிடையாது. காலத்துக்கு காலம் வெளிவிவகார கொள்கைகள் மாற்றியமைக்கப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வெளிவிவகார கொள்கை எவ்வகையில் காணப்பட்டது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவை விலைக்கு வாங்கியதை போன்று எங்களை உலக நாடுகளால் விலைக்கு வாங்க முடியாது. இந்திய விஜயத்தின் போது பல விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டன. நாட்டின் தேசிய வளங்களைத் தாரைவார்க்க ஒத்துழைப்பு வழங்குவதாக நாங்கள் குறிப்பிடவில்லை. காலவோட்டத்துக்கு பின்னர் உலகமும்,அரசியலும் மாற்றமடைந்துள்ளன. ஆகவே நாங்களும் மாற்றமடைந்துள்ளோம் என்று இந்திய வெளியுறவு அமைச்சரிடம் குறிப்பிட்டோம். இந்தியாவும் சகல துறைகளிலும் கொள்கைகளைப் புதுப்பித்துள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடு என்ற ரீதியில் தனித்துச் செயற்பட முடியாது, சகல தரப்பினரின் ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நாட்டுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலான வெளிவிவகார கொள்கையிலிருந்துக் கொண்டு நாங்கள் செயற்படுவோம்."– என்றார்.

# பெண்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கத்தை ஸ்தாபிப்போம்

## தேசிய மக்கள் சக்தி எம்.பி. ஹரினி அமரசூரிய தெரிவிப்பு

"பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகிறார். ஆனால் குடும்ப பெண்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். பெண்களின் ஒத்துழைப்புடன் பலமான அரசாங்கத்தை ஸ்தாபிப்போம்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசியல் ரீதியில் இதுவரை காலமும் கடைப்பிடித்த தவறான கொள்கையின் பிரதிபலனை இன்று ஒட்டுமொத்த நாடும் எதிர்கொள்கிறது. பொருளாதார ரீதியில் மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

பொருளாதார பாதிப்பினால் குடும்ப பெண்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.தமது பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவது தாய்மார் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாகக் காணப்படுகிறது.அரச தலைவர்களின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் குடும்ப பெண்கள் நுண்கடன் திட்டம் என்ற கோரப்பிடிக்குள் சிக்குண்டுள்ளார்கள்.

பொருளாதாரப்பாதிப்பிலிருந்துமீண்டு விட்டோம் என ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் மாத்திரமே குறிப்பிட முடியும். மக்கள் மத்தியில் அவரால் குறிப்பிட முடியாது. பொருளாதார பாதிப்பிலிருந்து



மீள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை மேன்மேலும் நெருக்கடிக்குள்ளாகும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகிறது.

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களிடமிருந்து சிறந்த முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. நாட்டை சீரழித்தவர்களுக்கு இந்த ஆண்டு தீர்மானமிக்கதாகஅமையும்.பெண்களின் ஒத்துழைப்புடன் பலமான அரசாங்கத்தை ஸ்தாபிப்போம்."– என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கும் விதமாக சஜித் அணியினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். அதற்கு மாறாக, சஜித் அணியில் ஒரு சில எம்.பிக்கள் சபையில் அமர்ந்திருந்து ஜனாதிபதியின் உரையை செவிமடுத்தனர். அவ்வாறு சஜித் அணியில் அதிருப்தியாளர்களாக இருந்த ஒரு சில எம். பிக்களில் சரத் பொன்சேகாவும் ஒருவர்.

அந்த உரையின் பின்னர் நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதியின் அறையில் அவரைப் போய் சந்தித்தார் சரத் பொன்சேகா. மூடிய அறைக்குள் நடந்த உரையாடலில் ஒரு முக்கிய 'டீல்' உறுதியானதாகத் தெரிகின்றது.

சரத் பொன்சேகா, தனியார் வங்கியொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்புச் செய்த பணத்தைக் கறையான் அரித்துள்ளதாக சில செய்தி ஏஜென்ஸிகள் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா பொது வேட்பாளராக போட்டியிட்டிருந்தார். அதன் போது அவருக்கு ஐந்து லட்சத்து இருபத்தி ஏழாயிரம் அமெரிக்க டொலர்கள் மற்றும் 100 ஸ்டேர்லிங் பவுண் என்பன தேர்தல் நிதியாகக் கிடைக்கப் பெற்றிருந்தன. அதன் இன்றைய பெறுமதி சுமார் 16 கோடி ரூபா என்று மதிப்பிடப்படுகின்றது.

எனினும் அன்றைய ராஜபக்ஷ அரசாங்கம் அந்தப் பணத்தை முடக்கியதுடன், பணச்சலவைச் சட்டத்தின் கீழ் பொன்சேகாவுக்கு எதிராக வழக்கும் தொடுத்திருந்தது.

பொன்சேகாவின் வங்கிப் பணப்பெட்டகத்தை நீதிமன்ற உத்தரவோடு சென்று திறந்து சோதனையிட்ட அப்போதைய ராஜபக்ஷ அரசு நிர்வாகம் அந்தப் பாதுகாப்புப் பெட்டகத்துடன் அதனை சீல் வைத்து முடக்கியது.

இதனையடுத்து அந்தப் பணம் தனது தேர்தல் பிரச்சாரங்களுக்காக கிடைத்த அன்பளிப்புப் பணம் என்று சரத் பொன்சேகா சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்தி இருந்தார்.

அவ்வாறு முடக்கப்பட்ட பணநோட்டுகள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் பாதுகாப்புப் பெட்டகத்தினுள் கறையான் அரித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே தற்போதைய பெறுமதியில் 16 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை கொண்ட இந்தப் பணநோட்டுகளுக்குச் சமனான தொகையைத் தனக்கு மீண்டும் விடுவிக்குமாறு சரத் பொன்சேகா கடிதம் மூலம் நிதியமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற முறையில் சரத் பொன்சேகாவின் கோரிக்கையை ஏற்று, கறையான் அரித்த தொகைக்குச் சமமான பணத்தை திறைசேரியில் இருந்து விடுவிப்பதற்கு உத்தரவிட இணங்கி உள்ளார் என்று தெரிகின்றது.

அணிமாறும் சரத் பொன்சேகாவின் 'பல்டி'யின் பின்னால் வலுவான வருமானம் இருப்பது தெளிவு. சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை...!

## நாடு திரும்பினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவினர் நேற்றுக் காலை நாடு திரும்பினர்.

ஶ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் அவர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

## உயர்தர மாணவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட மாணவி பலாங்கொடை பிரதேசத்தில் பிரபல தமிழ்ப் பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் பலாங்கொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கயிறு கழுத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா, மாகாஸ்தோட்ட பகுதியில் தனிவீட்டில் தாய், இரு மகள்மார் மற்றும் மகன் என நால்வர் வசித்து வருகின்றனர்.

தந்தை இறந்து ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில், தாய் பிள்ளைகளைப் படிக்க வைத்து வாழ்ந்து வரும் நிலையில், மூத்த மகள் பல்கலைக்கழகப் படிப்புக்குச் சென்ற பின் வீட்டில் சிறிய மகள் தாய் மற்றும் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் என மூவர் வசித்து வந்துள்ளனர்.

இந்தநிலையில் வழமைபோல் சிறுவன்சவக்குமரம்ஒன்றில்கயிறுகட்டிவிளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

தாய் தலைவலியால் வீட்டில் படுத்து இருந்த நிலையில் பகல் ஒரு மணியளவில் மரத்தில் விளையாடிய சிறுவன் கழுத்தில் கயிறு இறுகித் துடித்துள்ளார். சம்பவத்தை அவதானித்த அருகிலிருந்த வீட்டார் அந்தச் சிறுவனைக் காப்பாற்றுங்கள் என்று கூச்சலிட்டுள்ளனர்.

இதையடுத்து மரத்துக்கு அருகில் ஓடியவர்கள் சிறுவனை மீட்ட போதிலும் சிறுவன் மயக்கத்தில் இருக்கின்றார் என்று உணர்ந்து 1990 அவசர அம்புலன்ஸ்க்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பின் அவசர அம்புலன்ஸ் வாகனத்தில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த மருத்துவர்கள் சிறுவனைப் பரிசோதித்த போது சிறுவன் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில் சம்பவ இடத்துக்கு வந்த நுவரெலியா பொலிஸார் விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் நுவரெலியா மாவட்ட நீதிவானின் மரண விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## ரயில் மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாவடைந்துள்ளார்.

தம்பலகாமம் பகுதியிலுள்ள பாலத்துக்குஅருகில்சகநண்பர்களுடன்மீன்பிடித்துக் கொண்டிருந்த சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

முள்ளிப்பொத்தானை, யூனிட் – 07 பகுதியைச் சேர்ந்த தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவனான நளீம் முஹம்மது சப்ரிட் (வயது 14) என்பவரே மேற்படி விபத்தில் சாவடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழரசில் சமரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி சர்ச்சைக்குத் தீர்வு காணும் முகமாக இதுவரைப் பதில் பொதுச் செயலாளர் பதவி வகித்த டாக்டர் ப.சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் நேற்று பிரமுகர்கள் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டவர் என அறிவிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டக் குழுத் தலைவர் ச.குகதாசன், அவருக்குப் போட்டியாக பொதுச் செயலாளர் பதவியைக் கோரும் ஞா.சிறிநேசன், அரியநேத்திரன், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கோடீஸ்வரன்ஆகியோரும்கலந்துகொண்டனர் எனத் தெரிகின்றது.

இதன்போது திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும் பொதுச் செயலாளர்பதவியைஒவ்வொருவருடமாகபகிர்ந்து கொள்வது தொடர்பில் பேசப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும் முதலில் யார் ஒரு வருடம் பதவி வகிப்பது என்பது தொடர்பில் இருவருக்கும் இடையில் இணக்கப்பாடு இன்றி முரண்பாடுகள் ஏற்பட்டு முடிவுகள் எட்டப்படாத நிலைமை உருவானது.

இருவரும் தாம் பொதுச் செயலாளராக வருவதற்குரிய காரணங்களை நியாயப்படுத்தியிருந்தனர்.

எனினும், இருவரையும் தங்களுக்குள் பேசி இரண்டு நாள்களுக்குள் முடிவு தருமாறு கூறி நேற்றைய கலந்துரையாடல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக அறிய வந்தது.

வெளிநாடு சென்றிருந்த கட்சியின் மூத்த தலைவரான மாவை சேனாதிராஜா நேற்று முன்தினம் பலாலி ஊடாக நாடு திரும்பியிருந்தார். எனினும் நேற்றைய கூட்டத்தில் அவர் பங்குபற்றவில்லை.

கட்சியின் மற்றைய மூத்த பிரமுகர்களான சி.வி.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், சேவியர் குலநாயகம் போன்றோருக்கு நேற்றைய கூட்டம் குறித்து எதுவுமே தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

பொதுச்செயலாளராக அறிவிக்கப்பட்ட குகதாசன், சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர் எனக் கூறப்பட்ட போதும் நேற்று இந்தக் கூட்டம் நடைபெறுவது குறித்தோ, அதில் தாம் பங்குபற்றுவது பற்றியோ, அதன் பெறுபேறுகள் குறித்தோ எந்தத் தகவலையும் அவர் சுமந்திரனுக்கோ அல்லது அவரது தரப்பில் வேறு எவருக்குமோ மூச்சே விடவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



# சீதாஎலிய சீதையம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

இராமாயணத்துடன் தொடர்புடைய ஆலயமாக போற்றப்படுகின்ற நுவரெலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நேற்று இடம்பெற்றது.

அயோத்தி இராமர் ஆலய கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்ற நிலையில் இந்த ஆலயத்தில் கும்பாபிஷேக திருப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சீதாஎலியா சீதையம்மன் ஆலயம், இராவணனால் சீதை சிறைவைக்கப்பட்ட அசோக வனத்தில் அமைந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் நேற்று பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்றது.

காலை முதல் நடைபெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளை அடுத்து பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூலமூர்த்திகளான இராமர், சீதை, இலட்சுமனன், ஆஞ்சநேயர் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த பூஜை வழிபாடுகளில் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்த பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இராம ஜென்ம பூமியான அயோத்தியில் பிராண பிரதிஷ்டை நடைபெற்று இராமல் ஆலயம் திறக்கப்பட்டுள்ள நிலையில் சீதாஎலியா சீதையம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் விரைவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புதிய பாதை நாடுவோம்!

தங்களின் தேசிய இனப் பிரச்சினை விவகாரத்தில் தங்களுக்கு அகப்பலமாக இருந்த ஆயுதப் போராட்ட வலிமையையும், புறப்பலமாக இருப்பதாகத் தோன்றிய இந்திய ஆதரவுப் பின்னணியையும், சர்வதேச பின்புல ஆதரவு தளத்தையும் இழந்துவிட்ட ஈழத் தமிழர்கள், இன்று தமது இலக்கை அடைவதற்கு வக்கற்றவர்களாக அந்தரிக்கின்றார்கள். அடுத்தது என்ன என்று தெரியாத இக்கட்டில் தடுமாறுகின்றார்கள்.

இந்தச் சமயத்தில் தென்னிலங்கையில் தன்னைவலுவானஅரசியல்சக்தியாகவளர்த்தெடுத்து வரும் ஜே.வி.பியின் நகர்வுகள் ஈழத் தமிழர்களுக்கு சில படிப்பினைகளை - அறிவுறுத்தல்களை - தரக் கூடும். அதனால் அவற்றை ஈழத் தமிழர்கள் கூர்ந்து நோக்க வேண்டும்.

வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சுயபலத்தை இன்று கொண்டிராத ஈழத் தமிழர்களும், அவர்களுக்கு ஊக்க சக்தியாக நிற்கும் புலம்பெயர் தமிழர்களும், சர்வதேச தொடர்பாடல்கள் மற்றும் உறவுகளை புதிய முறையில் கையாளுவதன் மூலமே தங்களை ஓரளவுக்கேனும் நிலைப்படுத்தி, ஸ்திரப்படுத்திக் கொள்ள முடியும் என்பதை உணர வேண்டும்.

தத்தமது தேச நலன்களை அடிப்படையாக வைத்து சர்வதேச நாடுகள் நடத்தும் சதுரங்க ஆட்டத்தின் ஏதோ ஒரு பகுதியாக ஈழத் தமிழரின் தேச நலன் சார்ந்த முனைப்பிற்கும் ஓர் இடம் கிடைக்கும். அதைத் தேடிக் கண்டுபிடித்து, அதில் எங்களின் காலை வலுவாக ஊன்றிக் கொள்வதுதான் இப்போது முக்கியம்.

மாறிவரும் சர்வதேச கட்டமைப்புகளின் போக்குகளைப் புரிந்து கொள்ளாமல் - உலக செல்நெறிகளின் மார்க்கங்களை விளங்கிக் கொள்ளாமல் - காலங்காலமான மரபார்ந்த ஒரு நிலைப்பாட்டில் நாம் தேங்கி நிற்போமானால் சர்வதேசம் நம்மைக் கைவிட்டு மறந்து போகும் சூழலே ஏற்படும்.

எங்களுக்காக - ஈழத் தமிழர்களுக்காக - இந்தியா தீவிரமாக குரல் எழுப்பிய ஒரு காலம் இருந்தது. தமிழ் போராளிகளுக்கு மறைவிட முகாம்களை அமைத்து, ஆயுதப் பயிற்சிகள் வழங்கி, அவர்களுக்கு ஆணித்தரமாக உதவி, ஈழத் தமிழர்களின் போராட்ட வலிமையை விஸ்வரூபம் எடுக்கச் செய்யும் அளவுக்கு பாரதம் நேரடியாக ஊக்குவித்த ஒரு காலம் இருந்தது.

ஈழத் தமிழர்களின் நலனுக்காக, கொழும்பை அடிபணிய வைத்து, இலங்கையுடன் ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை இந்தியாவலிந்து முன்னெடுக்கின்றது என்று வெளிப்படையாகக் காட்டப்பட்ட ஒரு சூழல் இருந்தது.

அந்த ஒப்பந்த நடைமுறையாக்கம் என்ற பெயரில் இந்தியா தனது ஒரு லட்சத்துக்கும் அதிகமான படைகளை ஈழத் தமிழர் தாயகம் எங்கும் பரப்பி, இரண்டரை ஆண்டுகள் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்த ஒரு கால கட்டமும் கூட நிலவியது.

சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்ற போது ஆற்றிய பேருரையில் குறிப்பிட்டமை போன்று -

“நமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் காலமிட்ட ஒரு கட்டாய கோலமாகஇந்தியத்தலையீடுஅமைந்தது. நுட்பமான இராஜதந்திர வளைவுகளை வரைந்து, சூட்சுமமானஅரசியல்வர்ணங்களைக் கலந்து, அதனை ஓர் அழகான கோலமாகஆக்குவதும்அல்லதுஅதனை கலைத்துச் சிதைத்து அலங்கோலமாக்கி விடுவதும் எமது கைகளிலேயே இருந்தது.”

ஆனால் அந்த முயற்சி எமக்கு அழகிய கோலமாகக் கிட்டவில்லை. மாறாக, அலங்கோலமாகவே முடிந்தது. அல்லது முடித்தோம்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. இந்தியப் போக்கும் உலக செல்நெறியும் தலைகீழாகி விட்டன. மூலோபாயங்கள், தந்திரோபாயங்கள் மாறிவிட்டன. அணிசேர்க்கைகள்கூடமாறிஅமைந்துள்ளன.

அதை உணர்ந்து, இனி நாம் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சேர வேண்டிய அணிகள், தரப்புகளை நிலைமைக்கு ஏற்ப மாற்றுவதற்கு சமயோசிதமாக - சாணக்கியமாக - சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

சீனாவுடன் நின்ற, நிற்கின்ற - இந்தியாவைக்கரித்துக்கொட்டிய-அமெரிக்க முதளாளித்துவத்தை வசை பாடுகின்ற - ஜே.வி.பியின் தலைவர் இப்போது அமெரிக்காவுக்கும் போகிறார், இந்தியாவுடனும் நட்புறவைப் பலப்படுத்துகின்றார்.

இந்தப் பாடங்களைப் புரிந்து கொண்டு, புதிய கதவுகளை நாம் தட்ட வேண்டும். புதியமார்க்கங்களில்பயணிக்கத்தயாராகவேண்டும். புதியஉறவுகளை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

# ‘தி.மு.க. ஆட்சி மிக மோசமானது’: ஜெ.பி.நட்டா சென்னையில் கருத்து



தமிழகத்தில் நடைபெற்று வரும் திமுக ஆட்சி மிக மோசமானது” என பாஜக தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா தெரிவித்தார். தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் இதனை தெரிவித் திருந்தார். இந்தக் கூட்டத்தில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், சுதாகர் ரெட்டி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சென்னையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா பங்கேற்று பேசினார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்.

“நான் இங்கு வந்தபோது சந்தை மூடப்பட்டு உள்ளது. தெரு விளக்குகள் அணைக்கப்பட்டு உள்ளன. அதிக அளவி லான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த காட்சிகள் எனக்கு “எமர்ஜென்சி“ நாள்களை நினைவூட்டுகிறது.

ஆனால், நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகி றேன். ஸ்டாலின் அவர்களே, நீங்கள் ஆட்சியில் இருந்து வெளியேறும் நாள் வெகு தொலைவில் இல்லை. யாரையும் கடை திறக்கவோ, வெளியில் வரவோ போலீஸார் அனுமதிக்க வில்லை. இதுதான் ஜனநாயகமா?

தேசிய அளவில் தமிழகத்தில் பங்கு முக்கியமானது. பிரதமர் மோடிக்கு தமிழகம் மனதுக்கு மிகவும் நெருக்கமா னது. உலகத்தில் எங்கு சென்றாலும் தமிழ் குறித்து பேசுபவர் பிரதமர் மோடி. நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் செங்கோல் நிறுவப்பட்டுள்ளது. தமிழக வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கு பாரத ரத்னா விருது அறிவித்துள்ளது மத்திய அரசு.

தமிழகம் மோசமான தலைமையால் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. திமுக ஆட்சி மிக மோசமானது” என அவர் தெரிவித்தார்.

# சர்வாதிகார ஆட்சியை விரட்டி அடியுங்கள்: அண்ணன் ஜெகனை விமர்சித்தார் ஷர்மிளா

ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியின் தங்கை ஒய்.எஸ்.ஆர்.ஷர்மிளா சமீபத்தில் காங் கிரஸில் இணைந்தார். அவருக்கு மாநில காங் கிரஸ் தலைவர் பதவி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஆந்திர மாநிலத்தில் தற்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டு காங்கிரஸ் கட்சிக்காக ஷர்மிளா பிரசாரம் செய்து வருகிறார்.

குறிப்பாக அவர் தனது சகோதரரும், ஆந்திர மாநில முதல்வருமான ஜெகன் மோகன் ரெட் டியை தீவிரமாக விமர்சித்து வருகிறார். மறைந்த ஒய்.எஸ்.ராஜசேகரரெட்டியின்மகள்ஷர்மிளாவின் குற்றச்சாட்டுகளை ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸார் எதிர்கொள்ள முடியாமலும், ஷர்மிளாவை விமர் சிக்க முடியாமலும் திகைத்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அல்லூ ரி சீதா ராம ராஜு மாவட்டம், பாடேரு தொகுதி சிந்தபல்லியில் ஷர்மிளா உரையாற்றுகையில்,

“முதல்வர் ஜெகன், பா.ஜ.கவின் அடிமை யாகவே மாறிவிட்டார். சிங்கம், புலி என கூறிக் கொள்ளும் அவர், உண்மையிலே பா.ஜ.க. முன் ஒரு பூனை போல் ஆகிவிட்டார். கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு, ஆந்திராவுக்கு கொடுத்த மாநில பிரிவினை வாக்குறுதிகளில் ஒன்றை கூட நிறைவேற்றவில்லை.

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் மற்றும் தெலுங்கு தேசம் கட்சி இரண்டுமே பா.ஜ.கவின் கைப் பாவைகளாக மாறிவிட்டன. மாநிலத்திலும், மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால்தான் ஆந்திர மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து, போலா வரம் அணை கட்டும் பணிகள், ஆந்திர மாநிலத் தின் தலைநகர பிரச்சினை போன்றவை நிரந்தர மாக தீர்க்கப்படும். ” – என்றார்.



# மக்களவை தேர்தலில் 370 இற்கும் அதிக இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெறுமென பிரதமர் மோடி நம்பிக்கை

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. 370 இற்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலம் ஜபுகா மாவட்டத்தில் பழங்குடின மக்களுக்கு மத்தியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில்,

“எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் 543 தொகுதிக ளில் 370க்கும் அதிகமான இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெறுவதற்காக கடந்த தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடி யிலும் பாஜக பெற்ற வாக்குகளை விட கூடுதலாக 370 வாக்குகள் பெறுவதை வாக்காளர்கள் உறுதி செய்யவேண்டும். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட, தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 400 இடங்கள் கிடைக்கும் என இப்போது தெரிவிக்கின்றனர். பா.ஜ.கவின் தாமரைச் சின்னம் 370 இற்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

நான் ஜபுகாவுக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக வரவில்லை. சமீபத்தில் நடந்த மாநில தேர்தலில் மக்கள் அளித்த அளப் பரிய ஆதவுக்காக நன்றி தெரிவிக்க ஒரு சேவகனாக இங்கு வந்திருக்கிறேன். எங்களுடைய இரட்டை இயந்திர ஆட்சி மத்திய பிரதேசத்தில் இரட்டை வேகத்தில் வேலை செய்கி றது. இந்தக் கூட்டத்துக்கு வருவதற்கு முன்பாக மாநிலத் தில் 7,550 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன். காங்கிரஸ் கட்சி நீண்ட காலமாக ஏழைகள், விவசாயிகள் மற்றும் பழங்குடிகளை புறக்கணித்து



வந்துள்ளது. தேர்தல் நேரத்தில் மட்டும்தான் கிராமத்தினர், ஏழைகள், விவசாயிகள் காங்கிரஸ் கட்சியின் நினைவுக்கு வருவார்கள்.

தங்களது தோல்வியை அறிந்து கொண்ட காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக்கட்சிகள், கடைசி தந்திரத்தை கையாளுகின்றன. கொள்ளை மற்றும் பிரித்தாளுவது என்பது காங்கிரஸ் கட்சியின் கொள்கை. கடந்த ஆண்டு மத்திய அரசு தேசிய அரிவாள் ரத்த சோகை நோய் ஒழிப்பு இயக்கம் 2047-ஐ அறிமுகப்படுத்தியது. இது அரிவாள் செல் நோயால், குறிப்பாக பழங்குடியின மக்களுக்கிடை யில் ஏற்படும் சுகாதாரச் சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாக கொண்டது.

நாங்கள் வாக்குகளுக்காக அரிவாள் ரத்த சோகை நோய்க் கான பிரசாரத்தை தொடங்கவில்லை. பழங்குடியினரின் நலனுக்காகவே தொடங்கி உள்ளோம்.” – என்றார்.

# பாகிஸ்தான் பொதுத் தேர்தல் இறுதி முடிவுகள்: இம்ரான் கானின் கட்சி 97 இடங்களில் வெற்றி




பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அந்த நாட்டின் பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய, இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சிக்கு ஆதரவான சுயேச்சை வேட்பாளர்கள் 265 தொகுதிகளில் 97 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

அத்துடன், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சி 76 இடங்களிலும், பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாக தாமதமானமைக்கு எதிராக நேற்று போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் பாகிஸ்தான் தேர்தல் அலுவலகத்துக்கு வெளியில் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனினும், எந்த கட்சியும் பெரும்பான்மையை பெறாததால் தெளிவான வெற்றி கிடைக்காத நிலையில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சி மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகியன கூட்டணியாக அரசாங்கத்தை அமைப்பது குறித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன என தகவல் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும், அது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# ‘ராபா’ இராணுவ நடவடிக்கையினால் பதற்றம்: உலக நாடுகள் இஸ்ரேலுக்கு கடும் எச்சரிக்கை

காஸாவின் தெற்கு எல்லையான ராபாவில் தரைவழி இராணுவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார். இது அங்கு மனித பேரழிவையும் பின்விளைவுகளையும் ஏற்படுத்துமென பல்வேறு உலக நாடுகளும் இஸ்ரேலை கடுமையாக எச்சரித்துள்ளன.

ஜேர்மன், கட்டார், சவுதி ஆகிய நாடுகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன.

ஜெர்மனியின் வெளியுறவு துறை அமைச்சர் அன்னலெனா பேர்பாக் கூறுகையில் , “காஸா மக்கள் காற்றில் கரைந்து போகமாட்டார்கள். ராபாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் மனித பேரழிவை ஏற்படுத்தும்” எனத் தெரிவித்துள்ளார்.

முன்னர் காஸாவின் மற்ற பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தனர். ராபாவில் 80 சதவிகித மக்கள் தஞ்சமடைந்திருக்கும் நிலையில் இஸ்ரேலின் இந்த முடிவு மக்கள் அடுத்து எங்கு செல்வது என்கிற கேள்வியை எழுப்பியது.

எகிப்தின் எல்லை பகுதியான ராபாவிலிருந்து மக்களை இடம்பெயர கோரினால் எகிப்து நோக்கி அவர்கள் இடம்பெயரும் வாய்ப்பு உள்ளது. இது ஆபத்தான பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் 40 ஆண்டுகளாக இஸ்ரேல்-எகிப்து இடையே நிலவிவரும் உடன்படிக்கையை மீறும் செயல் எனவும் எகிப்து தெரிவித்துள்ளது.

மக்கள் எங்கு செல்வார்கள் என்கிற கேள்விக்கு நெதன்யாகு பதிலளித்துள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு குறிப்பிடுகையில், “ராபாவின் வடக்கு பகுதியில் நாங்கள் துப்புரவு செய்த இடங்கள் ஏராளமாக உள்ளன. விரிவான திட்டத்திற்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்” என அவர் தெரிவித்துள்ளார்.

# வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திற்குத் தேரர்களை இராணுவத்தினரே டிராக்டரில் அழைத்துச் சென்றனர்

(வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திற்கு நேற்றுத் திடீரென விஜயம் செய்த பௌத்த குருமாரை இராணுவத்தினர் தமது டிராக்டரில் ஏற்றி சென்றமை தெரிய வந்துள்ளது.

நீதிமன்ற தீர்ப்பு வரை சென்று தற்போது வழிபாடுகள் இடம் பெற்று வரும் நிலையில், நேற்றைய தினம் பௌத்தகுருமார் உள்ளடங்கிய குழுவினர் வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது, கொழும்பில் உள்ள தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் மெதகொட அபய திஸ்ஸ தேரர், சர்ச்சைக்குரிய முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் உள்ளிட்ட குழுவினரே இராணுவ பாதுகாப்புடன் அங்கு பிரச்சன்னமாகியிருந்தனர்.

அங்கு சென்ற பௌத்த குருமார் இது தமது பூர்வீக இடம் என மீண்டும் சர்ச்சையை உருவாக்கியிருந்தனர் எனத் தெரியவருகின்றது.

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயம் அமைந்துள்ள பகுதிக்கு இராணுவத்தினர் தமது டிராக்டரில் இக்குழுவினரை அழைத்து சென்றமை தற்போது ஆதாரமாக வெளிவந்துள்ளது.

குருந்தூர் மலை உட்பட பல்வேறு இடங்களிலும் பௌத்த குருமார் இராணுவத்தினர் மூலமாக செயற்பட்டு வரும் நிலையில் வெடுக்குநாறி ஆலயத்திலும் இராணுவத்தினரை பின்புலத்தில் இருந்து பௌத்த மயமாக்கல் செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றமை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.





## ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின்

# பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு

யாழ். ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலை அதிபர் க.சிவநேசன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தின் விவரம் வருமாறு:–

காப்பாளர்கள்:– அ.சா.அரியகுமார், ச.விஜயகுமார், வே.ஜெயபாலகிருஷ்ணன்

தலைவர்:– க.சிவநேசன் (பாடசாலை அதிபர்)

செயலாளர்:– வி.மன்மதகுமார்

பொருளாளர்:– திருமதி.சு.நிலாந்தினி (பாடசாலை ஆசிரியை)

உப செயலாளர்:– திருமதி.ற.அனுஷியா

நிர்வாக உறுப்பினர்கள்:– வே.சிவநேசன், செ.வேலுப்பிள்ளை, சி.சத்தியவரதன், ஆ.இளங்கோ, த.சாந்தநேசன்.

# முட்டையின் சில்லறை விலை 65 ரூபா வரை அதிகரிக்கும்



முட்டை ஒன்றின் சில்லறை விலை அடுத்த வாரம் 62 முதல் 65 ரூபா வரை அதிகரிக்கப்படும் என அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

மொத்த வியாபாரிகள் கோழிப் பண்ணைகளில் ஒரு முட்டையை 53 அல்லது 54 ரூபாவுக்குப் பெற்று ஒரு முட்டையை 58 அல்லது 59 ரூபாவுக்கு சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்குகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மொத்த வியாபாரிகளால் 53 அல்லது 54 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் முட்டைகளுக்கு ஒரு முட்டைக்கான போக்குவரத்துச் செலவாக ஒரு ரூபாவும் மேலும் மூன்று ரூபாவும் சேர்த்தே சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 8 கடைகளின் உரிமையாளர்கள் கைது!



சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 8 கடைகளின் உரிமையாளர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹிக்கடுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான பாடசாலைகளுக்கு அருகில் கடைகளை நடத்தி வந்த 8 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் முன்னெடுத்த விசாரணையின் பிரகாரம் சந்தேகத்திற்குரிய கடை உரிமையாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கடைகளில் இருந்த சிகரெட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பாடசாலைகளுக்கு அருகாமையில் நடத்தப்படும் வகுப்புகளுக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கும் இந்த சந்தேக நபர்கள் சிகரெட்டுக்களை விற்பனை செய்துள்ளனர் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கையின் மூலம் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு எதிராக காலி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சிறுவர்களுக்கான சிகிச்சைகளுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து உதவி



சிறுவர்களுக்கு ராகம போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் கல்லீரல் மாற்று சத்திர சிகிச்சை மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் செவிப்புலன் சத்திரசிகிச்சை என்பவற்றுக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து இருந்து நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, ராகம போதனா வைத்தியசாலையில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னும் அதன் பின்னரான பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அதன்படி, உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்களுக்காக, இந்த சத்திர சிகிச்சைக்கு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10 லட்சம் ரூபா வழங்கப்படுகிறது.

அதேநேரம், பிறக்கும்போதே செவிப்புலன் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு, பிறந்து 2 வருடங்களின் பின்னர் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்காக செவிப்புலன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது இந்த அறுவை சிகிச்சை ஒரு சில அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்படுவதால், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அரச மருத்துவமனைகளில் இதற்காக காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு, இதனூடாக சுமார் 3 முதல் 4 மில்லியன் ரூபா வரையான பெறுமதி கொண்ட கருவிகள் பொறுத்தப்படுகின்றன.

சுகாதார அமைச்சினால் இந்த கருவி இலவசமாக வழங்கப்படுகின்ற போதிலும் சத்திரசிகிச்சைக்கு அதிக செலவு ஏற்படுகிறது.

எனவே, சத்திர சிகிச்சைக்கான செலவாக ஆறு லட்சம் ரூபாவை ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

# சிங்களத்தில் கரையும் கிழக்கைப் பாதுகாக்க அதனை வடக்குடன் இணைப்பதுதான் தீர்வு!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் வற்புறுத்து



(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களின் போரட்டம் கருணா, பிள்ளையானின் உச்சகட்ட பிரதேச வாதத்தின் ஊடாக அழிக்கப்பட்டது. அவ்வாறு மீண்டும் பிரதேசவாதம் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை அழித்து ஒழிப்பதற்காக செயற்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற போலி முகங்களை மக்கள் இனங்கண்டு ஒரங்கட்டவேண்டும். அதே வேளை சிங்கள தேசத்தில் கரைந்து செல்லும் கிழக்கைப் பாதுகாக்க கிழக்குடன் வடக்கு இணைக்கப்படவேண்டும். அதற்கு மக்கள் விழிப்படைய வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள ஊடக கற்கை வளநிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் கொண்டு வரப்பட்ட வடக்கு – கிழக்கு இணைப்புக்கு எதிராக ஜே.வி.பி. நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து அந்த இணைந்த வடகிழக்கு இணைப்பை பிரித்தது. இந்திய அரசாங்கத்திற்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராகவும் செயற்பட்டுக் கொண்டிருந்த ஜே.வி.பியிந்தலைவர் அனுரகுமார திஸநாயக்காவை இந்தியாவுக்கு அழைத்துள்ளனர்

1970 ஆம் ஆண்டு பகுதியில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்து இந்தியா தமிழ் இளைஞர்களை அழைத்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து, ஆயுதங்களைக் கொடுத்து, ஆதரவு செய்து வந்தது. இந்த நிலையில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்த விடயங்களில் இருந்த இயக்கங்களில் விடுதலைப் புலிகள் கடைசிவரை உறுதியாக இருந்து வந்தனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு ஒத்தாசை வழங்கி, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை மௌனிக்க செய்தனர். இருந்தும் இந்த போராட்டம் மௌனிக்கப்பட்டு 14 வருடம் கடந்தும் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை எட்டச் செய்யாமல், மாறாக முன்னாள் கிளர்ச்சிப் படையான ஜே.வி.பியை அழைத்து சந்தித்தமை தமிழ் மக்களுக்கு பெரும் கவலையை அளித்துள்ளது.

இந்தியா தமிழ் மக்கள் மீது ஒரு துளி கூட அக்கறையில்லாது தன்னுடைய பிராந்திய நலனுக்கு மாத்திரம் தமிழ் மக்களை பகடைக்காயாக பயன்படுத்தி கொண்டு வருகின்றமை இதில் இருந்து தெட்டத் தெளிவாக தெரிகின்றது.

எனவே இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றவேண்டும். வடகிழக்கு மக்கள்தான் இந்தியாவுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பார்கள். இந்தியாவை தமிழ் மக்கள் நேசிக்கின்றனர். இருந்தும் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட் பின்னர் கூட விடுதலைப் புலிகளின் தடையை நீக்காமல் தங்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்களை மாத்திரம் அழைத்திருப்பது ஒரு வேடிக்கையானது.

ஜனாதிபதி நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வு அவசியம் அல்ல எனத் தெரிவித்தார். அக்கருத்து வேடிக்கையானது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் கூறினர். ஆனால் உண்மையில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள்தான் நகைப்புக்குரியவை.

கடந்த 2015 நல்லாட்சி காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவையும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்ணை மூடிக் கொண்டு எந்த விதமான நிபந்தனையும் விதிக்காது,தெருத் தெருவாக துண்டுபிரசுரங்களை வழங்கி, ஆதரித்து ஆட்சிக்கு கொண்டுவந்தது.

இவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த நிலையில் எம்.சுமந்திரன் அப்போது பிரதமர் போல இருந்தார். ஆனால் தமிழ் மக்களுக்குரிய அடிப்படை பிரச்சனையைக் கூடத் தீர்க்கவில்லை. அவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றியமையுடன் தொடர்ந்து பின்கதவால் வந்த ஜனாதிபதியின் வரலாறு தெரிந்தும், அவருக்கு சர்வதேச ரீதியில் ஓர் அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

ஆனால் இன்று ஜனாதிபதியின் உரையை பார்த்து, இன்று நீதி கேட்பவர்களாகக் நீலிக்கண்ணீர் வடித்து மீண்டும் மக்களை ஏமாற்றும் நாடகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே ஜனாதிபதியின் கடந்த கால செயற்பாடு தொடர்பாக தமிழ் மக்கள் மிக விழிப்பாக இருக்கின்றமையுடன் தமிழ் மக்களை அழித்து ஒழித்துவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வெளிபடுத்தி வருகின்றது.

அந்த வகையில் கடந்த பெப்பிரவரி 4ஆம் திகதி வடக்கு கிழக்கில் கரி நாளாக பிரகடனப்படுத்தி வழமை போல் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த நிலையில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் பொலிஸாரின் அடக்கு முறைக்கு மத்தியில் மக்கள் போரட்டத்தில் வடக்கு, கிழக்கு பல்கலைகளக மாணவர்கள் மற்றும் வடக்கு மதகுருமார்கள் உப்பட பலர் கலந்கொண்டனர்.

இதன் போது வடக்கை சேர்ந்த ஒரு மதகுருவை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரை வடக்கில் போய் உங்கள் வேலையைப் பாருங்கள் என்ற பிரதேசவாதம் பேசியிருந்தார். இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஏன் என்றால் கருணா, பிள்ளையான் போன்றோரின் இந்தப் பிரதேச வாத உச்சக்கட்டத்தினால் மிகவும் பலமாக இருந்த ஆயுதபோராட்டம் அழிக்கப்பட்டது. அவ்வாறே மீண்டும் பிரதேச வாதம் ஊடாகத் தமிழ் மக்களை அழிப்பதற்காகச் செயற்பட்டுவரும் இப்படிப்பட்ட போலிமுகங்கள் இனங்காண வேண்டும். இந்த நாடாளு மன்ற உறுப்பினர் தொடர்பாக கடந்த காலத்தில் வெளிபடுத்தியுள்ளோம்.

பிள்ளையானும் சில முஸ்லிம் அரசியல் கட்சி தலைவர்களும் வடக்கு, கிழக்கு இணையைக் கூடாது என தெரிவித்து அவர்களின் அரசியலை அரங்கேற்றி வருகின்றனர்.

வடக்கி கிழக்கிலே உரிமைக்காக பல் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் உயிர் தியாகம் செய்த நிலையில் இப்படிப்பட்ட குறுகிய இலாபங்களுக்காக பிரதேசவாங்களை பேசி மக்களை சிதைக்கின்ற இந்தத் தரப்புக்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அதேவேளை இவ்வாறான சூழ்நிலையிலே தமிழ் மக்களின் தேசமாக வடக்கு – கிழக்கு இணைக்கப்பட வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் இந்தப் பிரதேச வாதத்திற்கு துணைபோக மாட்டோம் என தமிழர்கள் கிழக்கு மாகாணத்திலே ஓர் உறுதியான நிலையை எடுக்கவேண்டும்.

எனவே தமிழர்கள் இந்த தீவில் நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். தமிழ் மக்களின் தாயகம், தேசம், சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதனூடாக தமிழ் மக்கள் நிம்மதியாக வாழமுடியும். – என்றார்.

# ஜனாதிபதி தேர்தலில் சரியான நபரை பொதுமக்கள் தெரிவு செய்யவேண்டும்

## ஐ.தே.க, பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவிப்பு



"ஒக்டோபர் மாதம் இடம்பெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் மக்கள் சரியான தீர்மானம் மேற்கொண்டு சரியான நபரை தெரிவு செய்யாவிட்டால் நாட்டின் எதிர்காலம் தொடர்பாக எமக்கு கனவு கூடக் காண முடியாமல் போகும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளனம் நேற்று யக்கல பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாங்கள் இன்று தீர்மானமிக்க இடத்திலேயே இருக்கிறோம். இந்த வருடத்தை தேர்தல் வருடமாகவே நாங்கள் பார்க்கிறோம். ஒக்டோபர் மாதமாகும்போது எமக்கு ஜனாதிபதி தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். அதன் பின்னர் பொதுத் தேர்தலுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். அதனைத்தொடர்ந்து மாகாண, உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். அதனால் கட்சி என்ற வகையில் தற்போது இருந்தே அதற்காக தயாராக வேண்டும். மக்களின் தீர்மானத்துக்கமையவே நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். அதனால் நாட்டை எந்தத் திசைக்குக் கொண்டு செல்வது என்ற தீர்மானம் மக்களிடமே இருக்கிறது.

அத்துடன், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாடு எந்த நிலையில் இருந்தது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். நாங்கள் அனைவரும் வரிசைகளிலேயே இருந்தோம். அரசாங்க கணக்குகளில் ஒரு சதமும் இருக்கவில்லை. அன்று வங்குரோத்து நாட்டை பொறுப்பேற்க எந்தத் தலைவரும் முன்வரவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் தலைவர்கள் அவர்களின் பொறுப்பில் இருந்து தப்பிச் சென்றார்கள். எமது தலைவர் மாத்திரமே முன்வந்தார். ரணில் விக்கிரமசிங்க அன்று நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டமையாலேயே இந்த நாட்டிலே ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் ரணில் விக்கிர மசிங்க எடுத்த தீர்மானம் காரணமாகவே வங்குரோத்து நிலையில் இருந்து நாங்கள் வெளியில் வந்திருக்கிறோம். தீர்மானங்கள் எடுப்பதற்கு அவர் ஒருபோதும் பயப்பட்டவரல்லர். சவால்களுக்கும் பயம் இல்லை. அவ்வாறான ஒரு தலைவரே எமக்கு தேவை. இன்று போராட்டங்கள் இல்லாமல் நாடு ஸ்திர நிலைக்கு வரும்போது, அதிகாரத்தை எமக்கு வழங்கினால் தாங்கள் நாட்டை நிர்வகித்துக் காட்டுவார்கள் என எதிர்க்கட்சி தெரிவித்து வருகிறது. அன்று சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் தப்பிச் சென்றவர்களே தற்போது அதிகாரத்தைக் கேட்டு பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஆனால் இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதாக இருந்தால் நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். பிளவுபட்டுக்கொண்டு இந்த நாட்டை முன்னேற்றிச் செல்ல முடியாது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் கஷ்டப்பட்டு வருகின்றனர் என ஜனாதிபதி உணர்ந்துள்ளார்.

அதற்கு விரைவாகதீர்வுகாணதேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி தற்போது எடுத்துள்ளார். அதனால், ஜனாதிபதி முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களை தொடர்ந்து கொண்டு சென்றால் மாத்திரமே நாங்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரபிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமாகும். ஜனாதிபதி தேர்தலில் மக்கள் எடுக்கும் தீர்மானத்திலேயே அதன் முடிவு தங்கி இருக்கிறது. மக்கள் சரியான தீர்மானம் எடுத்து, சரியான நபரை ஜனாதிபதி ஆசனத்தில் அமரச்செய்தால் மாத்திரமே நாட்டின் எதிர்காலம் தொடர்பாக எமக்கு கனவு காணமுடியுமாகும்"– என்றார்.



# ஜனவரியில் வெளிநாட்டுப் பணியாளர்கள் மூலம் 48 கோடி 76 லட்சம் அமெ. டொலர் வருமானம்

கடந்த ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு பணியாளர்களினால், 487.6 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, 11.4 சதவீத அதிகரிப்பு என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் 437.5 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு பணியாளர்களின் பணவனுப்பலாக பதிவாகியிருந்தது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதத்தில், சுற்றுலாவினால் கிடைக்கப்பெற்ற வருமானம் அதிகரித்துள்ளது.

அதற்கமைய, 341.8 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியாக பெறப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சுற்றுலா துறையின் ஊடாக 153.5 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# வன்னி மண்ணின் உயிர்க் குரல்:
# போர்க்கள ஊடகர் சத்தியமூர்த்தி!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

( எழுத்தைத் தன் ஆயுதமாக்கி, வன்னிப் போர்க் களத்தின் ஊடகவியலாளரான பு. சத்தியமூர்த்தி தன்மூச்சை தாயகக் காற்றுடன் கலந்த நாள் 12-02-2009. அவரது நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது)



### வன்னியின் குரல் சத்தியமூர்த்தி

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட வன்னியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமுற்று 12-02-2009 அன்று உயிரிழந்தார்.

ஊடகத்துறையில் 1990 களில் ஈடுபடத் தொடங்கிய இவர், 'வெளிச்சம்' சஞ்சிகை உள்ளிட்ட அச்சு ஊடகங்களில் கவிதைகள், சிறுகதைகளை எழுதி வந்தார். 1990களின் பிற்பகுதியில் அரசியல் மற்றும் படைத்துறை ஊடகப்பணியில் ஈடுபட்டார். ஈழநாதத்தில் படைத்துறை பத்தியை எழுதி வந்த இவர், ஈழநாடு பத்திரிகையில் ஊடகவியலாளராகச் செயற்பட்டு அரசியல் படைத்துறை ஆய்வுகளையும் எழுதி வந்தார்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் தாயகத்தில் இருந்து ஈழத்து நிலைமைகளைப் புலம்பெயர் ஊடகங்களுக்குத் தொலைக்காட்சிகள், மற்றும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி.

### ஈழ ஊடகங்கள் மீது அரச அடக்குமுறை

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981 இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் 1987இல் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையைக் காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

நிமலராஜன் படுகொலை

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி கொல்லப்பட்டார்.

ஈழப் போரின் மையப் புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 22 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

### கருத்தியல் என்ற ஆயுதம்

கருத்தியல் என்ற ஆயுதம் மூலம் எதிரியை தாக்கி தகர்க்கும் வல்லமை எழுத்துப் போராளிகளுக்கு மட்டுமே உண்டு என்று வலிமையான ஊடகப் போராளியாக என வாழ்ந்து நிரூபித்துக் காட்டியவர் நாட்டுப்பற்றாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி.

ஒரு இனத்தின் அடையாளம் ஊடகம் எனபதை நெஞ்சில் நிறுத்தி வாழ்ந்த தலை சிறந்த ஊடகவியலாளராக விளங்கியவர் சத்தியமூர்த்தி.

ஊடகத்தை நிர்வகிக்கின்ற அல்லது அதனைப் பிரதிபலிக்கின்ற ஒப்பற்ற பணிதான் மகத்தான ஒரு இனத்தைப் பிரதிபலிக்கும் என்ற உண்மையை உணர்ந்து இந்த இலக்கணத்துக்கு வடிவம் கொடுத்த வரும் அவரே.

வன்னியில் போர்க் காலத்தில் தன்னாலான பணிகளை அயர்வின்றி ஆற்றித் தமிழ் மக்களுக்கு முன்மாதிரியாக இருந்த உணர்வு மிக்க ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தி.

வன்னியில் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையிலும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதாரம் சஞ்சிகையிலும் பணியாற்றினார்.

### வணங்கா மண்ணின் மைந்தன்

கால ஓட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிய அவர் அதன் மூலமும் ஊடகச் செயற்பாட்டை முன்னெடுத்தார்.

தொடர்ச்சி ▼

# வன்னி மண்ணின் உயிர்க் குரல்:
# போர்க்கள ஊடகர் சத்தியமூர்த்தி!

**தொடர்ச்சி ▲**

எழு கலை இலக்கியப் பேரவை, ஈழநாதம் மக்கள் நாளிதழ், மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் இதழியல் கற்கை நெறி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தக் கற்கை நெறியை அடுத்துப் பெரும் எண்ணிக்கையான படைப்பாளர்களும், ஊடகச் செயற்பாட்டாளர்களும் வெளிவந்தனர். அவ்வாறான வர்களில் ஒருவராக பு.சத்தியமூர்த்தியும் தன்னைப் புடம் போட்டு இன்னமும் மெருகேற்றி வெளியேறினார்.

சத்தியமூர்த்தியினுடைய ஊடகப் பணியானது புலம் பெயர் மக்களை நோக்கி விரிவடைந்தது. அரசியல் விமர்சனங்களை மேற்கொள்ளும் அவர் இலக்கியத்திலும் தன்னாலான பங்களிப்பை மேற்கொண்டார்.

ரீ.ரீ.என். (தமிழ் ஒளி), தரிசனம் தொலைக் காட்சிகளுக்கான நாளாந்த செய்திப்பார்வைத் தொகுப்பு, அரசியல் கலந்துரையாடல்கள், உள்ளூர் நடப்புக்கள் உட்பட்ட நிகழ்ச்சிகளை முன்னெடுத்த அவர் குறுகிய காலத்தில் புலம்பெயர் தமிழர்களால் நன்கறியப்பட்ட ஒருவராக மாற்றம் பெற்றார்.

புலம் பெயர் ஊடகங்கள் பலவற்றுக்கும் எழுதி வந்தார். குறிப்பாக பரிஸ் ஈழமுரசு, எரிமலை சஞ்சிகை, கனடாவின் உலகத் தமிழர் பத்திரிகை உட்பட்ட பல ஊடகங்களில் இவரது பல்வேறு படைப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

அதேபோல தாயகத்தில் வெள்ளிநாதத்திலும், ஈழநாதத்திலும் குறிப்பிட்ட அளவான இவரது படைப் புக்கள் வெளிவந்தன.

தாயகத்தில் ஊடக வளர்ச்சியை இன்னும் மேம் படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் ஊடக அறிவியல் கல்லூரியின் தோற்றம் முதல் அதன் இறுதிக் காலம் வரையில் அவரது கல்லூரிக்கான பணி ஓயாதே இருந்தது.

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நெருக்கடியான காலத்திலும் ஒதுங்கிவிடாமல் ஊடகப்பணியினை செவ்வனே ஆற்றி வந்த சத்தியமூர்த்தியின் இறுதி மூச்சு 12-02-2009 அன்று தாயக காற்றுடன் கலந்தது.



# காமினி ஜெயவிக்ரம பெரேராவின் நலனை
# நேரில் சென்று விசாரித்த ஜனாதிபதி ரணில்

சுகவீனமுற்றுள்ள முன்னாள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேராவின் நலம் விசாரிப்பதற்காக நேற்று காலை கடுகம்பலையில் உள்ள அவரின் இல்லத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றுள்ளார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சரின் நலன் பற்றி விசாரித்ததோடு சிறிது நேரம் அவருடன் உரையாடலில் ஈடு பட்டார்.

குடும்ப உறுப்பினர்களிடம் அவர் பற்றிய தகவல்களை கேட்டறிந்த ஜனாதிபதி, காமினி ஜெயவிக்ரம பெரேராவின் வீட்டிற்கு அருகில் ஒன்று கூடிய பிரதேச மக்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியுள்ளார்.

இந்த நிகழ்வில், முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், காமினி ஜெயவிக்ரம பெரேராவின் புதல்வரும் வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசங்க ஜெயவிக்ரம, குருநாகல் மாவட்ட அரசியல்வாதிகள், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்டோரும் இணைந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.02.2024


மேஷம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.


ரிஷபம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.


மிதுனம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணப் புழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.


கடகம்

இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகயும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.


சிம்மம்

இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறு–தியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்க ளிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.


கன்னி

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.


துலாம்

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.


விருச்சிகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.02.2024


தனுசு

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும்.


கும்பம்

இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.


மகரம்

உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.


மீனம்

இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.






# மக்கள் சரியான தீர்மானம் எடுக்காவிட்டால் இலங்கை பாதாளத்திற்குச் சென்றுவிடுமாம்

## ஐ.தே.க. உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு




"நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சியே அதனைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துவந்துள்ளது. என்றாலும் எமது வேலைத்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் எங்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். ஆனால் இந்த முறை மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்காவிட்டால் நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும்."

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளனம் நேற்று யக்கல பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அதனை விளங்கிக்கொண்டமையாலேயே ஜனாதிபதி சர்வதேச நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு, அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறார். ஆனால் ஜனாதிபதியின் இந்த சர்வதேச விஜயங்களை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தொடர்ந்து விமர்சனம் செய்து வந்தார்கள். ஆனால் தற்போது அவர்களும் சர்வதேச நாடுகளைச் சுற்றிவர ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதை தற்போதுதான் இவர்களுக்கு விளங்கி இருக்கிறது. என்றாலும் சர்வதேச நாட்டு தலைவர்களை நன்கு அறிந்த ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரம்தான். உலக நாட்டுத் தலைவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்ற அனுபவம் இருப்பதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே.

மேலும் நாட்டின் பொருளாதாரம் மறை பொருளாதாரமாகும்போது எல்லா சந்தர்ப்பங்களிலும், ஐக்கிய தேசிய கட்சி முன்வந்து, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கும்போது, அதனை பூரணப்படுத்த முன்னர் தேர்தலின் மூலம் எம்மை வீட்டுக்கு அனுப்பினார்கள். 2001 இல் நாட்டின் பொருளாதாரம் மறை பெறுமானத்தில் இருக்கும்போது அதனைக் கட்டியெழுப்பி வரும்போது எம்மை வீட்டுக்கு அனுப்பினார்கள். 2015 இலும் அதே நிலைமை ஏற்பட்டது.

இறுதியில் ஓர் ஆசனமும் இல்லாத நிலைக்கு ஐக்கிய தேசிய கட்சியை வீழ்ச்சியடையச் செய்தது. என்றாலும் மீண்டும் நாடு வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டை பொறுப்பேற்குமாறு தெரிவித்தனர். தற்போதும் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார். அதனால் நாட்டை கட்டியெழுப்பி பொருளாதாரத்தை பலப்படுத்திக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பினால், நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும்.

அதனால் நாட்டை கட்டியெழுப்பி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை அவ்வாறே கொண்டு செல்ல அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்குத் தேவையான தைரியத்தை அவருக்கு வழங்க வேண்டும்" – என்றார்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த 5 அதிகாரிகள் உட்பட 7 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தினால் அனுமதியளிக்கப்படாத பெருமளவிலான கார்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு பாரிய நஷ்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அனுமதி வழங்கப்படாத




சுமார் 400 கார்களை மோசடியான முறையில் அந்த திணைக்களத்தில் பதிவு செய்துள்ளமை தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் 156 வாகனங்கள் தொடர்பான தகவல்களை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை சொகுசு ரக வாகனங்கள் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பல ஆண்டுகள் தாமதமாக இந்த வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையினால் அரசாங்கத்துக்கு ஏராளமான வரி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் 7 வாகனங்களை தற்போதைய உரிமையாளர்களிடமிருந்து பெற்று இலங்கை சுங்கத்திடம் ஒப்படைக்குமாறு லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி 6 வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 5 வாகனங்கள் இலங்கை சுங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.